1974 மார்ச் 6]

ரூ. 48,000 செலவில் அந்த வட்டாரத்தில் இருக்கிற வேறு சில கிராமங்களையும் இணைத்து செயலாற்றுகிறது, இந்த முக்காரம் பாக்கம் காலனியும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும்.

Flood banks in Tiruttani taluk.

* Q.—301 Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to raise flood banks at Nailathur village, Adikilpattu village and Nehru Nagar in Tiruttani taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குசஸ்தலை ஆற்றின் கரையோரங்களில் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டும் குறிப்பு, தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, மழைக் காலத்தில் குசஸ்தலை ஆற்றிலே வெள்ளம் வருகிற நேரத்தில், அந்தப் பகுதியிலே கரையை உடைத்துக் கொண்டு ஊருக்குள்ளே போகிறது. அதனால், பயிர்ச் சேதம், உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து தலைமைப் பொறியாளர் பரிந்துரை செய்து ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அதற்கு அரசுதான் நிதி ஒதுக்க வேண்டும், எனவே அதற்கான நிதியை அரசு ஒதுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரெவினியூ போர்டிலிருந்து அரசுக்கு வந்த பிறகு, அரசு பரிசீலித்து, இருக்கிற நிதி வசதிக்குள் நிதி அளிக்கும்.

Doddahalla River Project

* 302 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH :
Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the State Government have recommended to the Central Government for sanctioning the Doddahalla River Project in Denkanikottah taluk; and

(b) if so, the details thereof?